# அண்ணங்கரார்ய வைபவம்

**வம்ச வரலாறும் பெற்றோர்களும் :** அனைத்துலகும் வாழப் பிறந்த நம்பிராமாநுசன், தாம் வளர்த்த தரிசனத்தைத் தமக்குப்பின் போற்றி வளர்ப்பதற்காக தமது சிடர்களில் முதல்வரான 74 பெயர்களை ஸிம்ஹாஸநாதிபதிகளாக நியமித்தார். இவர்களில் ஸ்ரீவத்ஸகுல திலகரான **முடும்பை நம்பி** ஒருவர். இவர் வழித் தோன்றலான மஹாசாரியர்களில் ஈடு முப்பத்தாறாயிரத்தை நமக்கு உதவிய வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளையும், பரம ரஹஸ்யமாக நம்முன்னோர் பேணிப் போந்த அர்த்தங்களை முதலில் ஏடுபடுத்தி உதவிய பரமகாருணிகரான பிள்ளை லோகாசாரியரும் மிக முக்கியர்கள். வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருத்தம்பியாரான மன்னனாரின் ஸந்ததியில் உதித்தவர் **ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன்** என்று உலகம் நிறைந்த புகழ்பெற்ற **ஹஸ்திகிரி நாதரண்ணா**. இவர் கச்சிப் பதியிலுள்ள திருத்தண்காவில் அவதரித்து நிகமாந்த மஹா குருவின் குமாரரான நயனவரதாசாரிய ஸ்வாமியின் திருவருளுக்கிலக்காகி, ஞானாதிகராய், திருமலையில் அப்பனுக்கு வழுவிலாவடிமை செய்துபோந்து, பிறகு கோயில் மணவாள மாமுனிகளுடைய பூரண கிருபைக்குப் பாத்திரராகி, அங்கேயே அத்தாணிச் சேவகராய் வாழ்ந்து, அஷ்டதிக்கஜங்களில் ஒருவராய் ஸ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸனத்தில் அபிஷிக்தராய்ப் பெரும் புகழுடன் வாழ்ந்தவர். இவர் வழியில் வந்து தோன்றிய ஆசாரியர்கள் பலர் ஞானநுஷ்டானத்தால் நிறைந்தவர்களாய் சிஷ்யர்களை வாழ்வித்துக் கொண்டு பல திவ்யதேசங்களில் விசேஷ மரியாதைகளைப் பெற்று வந்துள்ளனர். ஸமீப காலத்தில் இந்த மஹாத் ஸந்ததியில் தோன்றிய புஷ்கரம் ஆத்ய அனந்தாசார்ய

ஸ்வாமியும் இவர் ப்ரபௌத்ரரான ஜகத்குரு காதி அனந்தாசார்ய ஸ்வாமியும் இக்குலத்துக்குப் பெரும்புகழ் தேடித் தந்துள்ளனர். ஜகத்குரு காதி ஸ்வாமியின் திருத் தகப்பனாரிடம் இளமைக் கல்வி பயின்றவரும், காதி ஸ்வாமிக்கு இளமைக்கல்வி பயில்வித்தவருமான ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீமதுபயவே. அண்ணாரங்காசாரியர் என்ற ரங்க நாதாசாரியரே நமது கதாநாயகரான அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஆவர். அண்ணாரங்காசாரியர் ஸ்ரீமதுபயவே ஷஷ்டி வரதாசார்யஸ்வாமி என்ற மஹானின் குமாரத்தியான ஸௌ. **அலர்மேல் மங்கையம்மாளை** தர்ம பத்னியாகப் பெற்றார்.

இந்த ஷஷ்டி ஸ்வாமி பின்னர் ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணி முக்கோல் பிடித்து ஸ்ரீ காஞ்சி அழகிய மணவாள ஜீயர் ஆஸ்தானத்தை சுமார் 40 ஆண்டுகள் அலங்கரித்து **ஷஷ்டிஜீயர்** ஸ்வாமி என்று புகழ் பெற்றவர். இந்த ஸ்வாமி நம் ஸம்ப்ரதாயத்தில் ப்ரசண்ட பண்டிதர். தமிழில் நல்ல விரகர். ஸங்கீதத்தில் நிபுணர். இப்படியாகச் சான்றோர் என்று மதிக்கத் தக்க பெருங்குடியில் பிறந்தவர்களைப் பெற்றோராக வாய்க்கப்பெற்ற நமது ஸ்வாமி தம் குலத் துக்கு ஒரு கலங்கரை விளக்கமாக, மஹாமேதாவியாக உருவானதில் வியப்பில்லை.

**நம் ஸ்வாமியின் அஸாதாரணப் பெருமைகள்: மஹா மஹிமோபாத்யாய, பத்மவிபூஷண, வ்யாக்யான வாசஸ்பதி, ஜகதசார்ய ஸிம்ஹாஸனாதிபதி, மஹாவித்வான், செந்தமிழ்ச் செல்வர், வேதபாரங்கதர் ஸ்ரீபதுபயவே. பெருமாள்கோயில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி** என்றால் சமயப்பற்றுள்ளவர்களில் அறியாதார் யாருமே இருக்க மாட்டார்கள். இவருடைய வாழ்க்கை வரலாற்றினைக் கூறுமுன் இவர் பெருமைகளையும் ஸாதனைகளையும் ஓரளவாவது பேசாவிடின் தரிக்க இயலாமையால், சிறிது பேசி

ஸத்தை பெறுகிறேன். ஸ்வாமியை **ஸர்வவித்யாபாரங்கதர்** என்று சுருக்கமாகச் சொல்லி விடலாம். தமிழிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் இவர் கற்காத பழம்பெரும் நூல் யாதும் இல்லை. பல பெரியார்களிடம் அடிபணிந்து கல்வி கற்றமையால் கடல்பரப்பைப் போன்ற விசாலமான அறிவும், அதைப்போலவே ஆழ்ந்த தெளிந்த ஞானமும் பெற்றவர். யஜுர் வேதத்தை முறையாக ஓதக்கற்று, வேத பாஷ்யங்களையும் ஆராய்ந்து, ஆழ்வார்களின் ஈரச்சொற்களான அருளிச் செயல்களை ஸகல பூர்வாசார்யர்களின் வியாக்கியானங்களுடன் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிந்து, ''இவற்றுள் எதில் பரீக்ஷித்தாலும் தயங்காமல் ஸரியான விடைகள் தருவேன்' தவறினால் என் நாவைத் துண்டியுங்கள்'' என்று தமதிளமையிலேயே பரீக்ஷை தந்து வெற்றியுடன் தேறியவர். தமிழ், ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, ஹிந்தி, இந்நான்கு மொழிகளிலும் ஆயிரத்துக்கும் மேலான லோகோபகாரமான நூல்களை இயற்றி வெளியிட்டவர். ஸத்ஸம்ப்ரதாயத்துக்குப் புறம்பானவர்களையும், அதனுள்ளிருந்து தவறான பொருளுரைப்பவர்களையும் க்ரந்தங்கள் மூலம் வாய்மாளப் பண்ணுமவர். தமது வாழ்நாளில் 4000-த்திற்கும் மேற்பட்ட சமயச் சொற்பொழிவு (ஸம்ப்ரதாய உபன்யாஸங்களை) களை ஆற்றியவர். சிறிய திருவடியான ஆஞ்சநேயர் போலச் சொல்லின் செல்வராய், பெருமான் தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல ஸரளமாயும் ஒரு அபசப்தமும் அபார்த்தமும் காணக்கிடையாமல் சொற்பொழிவாற்ற வல்ல நாவன்மை படைத்தவர். வேதவேதாந்த வைஜயந்தி பாடசாலையை ஸ்தாபித்து மாணவர்களுக்கு வயிற்றுப் பசிக்கும் கல்விப் பசிக்கும் உணவிட்டு வளர்த்தவர். ஜகதாசார்யரான நம்பிள்ளைக்கும் அவர் ப்ரதான சிஷ்யர்களான ஆசாரியர்களுக்கும் கோவில் கட்டிப் பூசித்துப் போற்றுமவர். நம் ஸ்வாமி ஒரு தனி நபர் அல்ல. ஒரு மாபெரும் ஸ்தாபனம் அவர். ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் என்னலாம். தாம் ஸம்பாதித்துப் பெற்ற ஞானம்

பழுதாகாதபடி பின்னோரும் பயனுற இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்களான பொக்கிஷங்கள் ஒருபுறமிருக்க, இவர் ஆழ்ந்து அநுபவித்துச் சொல்லும் பகவத் குணாம்ருதமயமான இன்சொற்களை வெண்கல மணிபோலும் வீணாகானம் போலும் இனிதான இவர் குரலில் கேட்டு, அநுபவிக்க இவருடன் ஸமகாலத்தில் வாழ வாய்ப்பு பெற்றமையால் நாம் ''கொடுத்து வைத்த'' மஹா பாக்யசாலிகளன்றோ? இது எம்பெருமான் பேரருளன்றோ? பராசர பாராசர்யாதி மஹரிஷிகளும் நாத யாமுந யதிவர வேதாந்தாசார்ய வரவரமுநேத்யாதி ஸகல பூருவாசாரியர்களும் ஒருங்கே இவர் மூலமாக நமக்குக் காட்சி தருகின்றனர் என்றால் மிகையே ஆகாது. மேலே (முதலில்) வரையப்பட்டுள்ள பிருதாவளிகளால் அலங்கரிக்கப்பட்டு அவற்றுக்குப் பெருமையூட்டுபவர் நமது ஸ்வாமி.

**பிறப்பும் இளமைக் கல்வியும்:** மேலே கூறப்பட்ட ஸ்ரீமத் அண்ணங்கராசார்யஸ்வாமியின் ஒரே புத்ர ரத்னமாக கி. பி. 1891-க்குச் சரியான விக்ருதி ௵ பங்குனி விசாகத் திருநாளன்று பிறந்தவர் நம் ஸ்வாமி. இவருடன் பிறந்த ஸகோதரிகள் மூவருண்டு. ஒரே பிள்ளையாதலால் செல்லப் பிள்ளையாக வளர்ந்தவராயினும், பரம வைதிகரும் வைதிக ஆசார அநுஷ்டானங்களில் மிகுந்த ஊற்றமுடைய தகப்பனாரால் கடுமையான கட்டுப்பாடுடனேயே (discipline) வளர்க்கப்பட்டார். சௌளம், உபநயனம் முதலான வைதிக ஸம்ஸ்காரங்களைத் தக்க காலங்களில் முடித்துத் தாமே இவருக்கு ஸம்ஸ்க்ருத பாடங்களைப் போதித்து, சிறு பிராயத்திலேயே வடமொழியை நன்றாகப் பேசவும் எழுதவும் வல்லவராக்கினார் பிள்ளையின் நலனையே பேணும் தகப்பனார். நம் அண்ணாவுடைய இளமைக்கல்வி தகப்பனாரிடத்திலும் ஜீயர்தாத்தா (மாதாமஹ ஷஷ்டி ஜீயர் ஸ்வாமி) விடமுமே நடைபெற்றது. முன்னவர் முக்கியமாக வடமொழியையும் பின்னவர் முக்கியமாகத்

தமிழ் மொழியையும் போதித்தவர்கள். நன்னூல், கம்ப ராமாயணம், பிள்ளைப் பெருமாளையங்காரின் அஷ்டப்பிரபந்தங்கள் முதலிய பல நூல்களைச் சந்தையாகவே சொல்லி வைத்துக் கண்டபாடமாக்கி வைத்தார் ஜீயர் ஸ்வாமி. தமிழ், தெலுங்கு, நாகரி, கிரந்தம், ஆங்கிலம் எல்லா லிபிகளிலும் (script) அக்காலந் தொடங்கியே ஸ்வாமிக்கு நல்ல பயிற்சி உண்டு.

காஞ்சீபுரத்தில் அக்காலத்தில் ஆங்கிலப்பள்ளி எதுவுமில்லாததால் ஸம்ஸ்க்ருத பாடசாலைகளில் பல மாணவர்கள் படித்துத்தேறி நல்ல வித்வான்களாய் விளங்கினர். அப்போது காஞ்சீநகரம் காசி போலப் பிரபல ஸம்ஸ்க்ருத வித்யா பீடமாக அமைந்திருந்தது. ஸன்னிதிவீதியில் வானமாமலை மடத்தில் பெரியதொரு பாடசாலையும் கோவில் வசந்த மண்டபத்தில் **சடகோபவிலயம்** என்றொரு பாடசாலையும் நடந்து வந்தன. இவைகளுக்குப்பின்னர் **வேதாந்த வைஜயந்தீ** என்ற பாடசாலையொன்று ப்ரதிவாதிபயங்கரம் அண்ணன் ஸன்னிதியில் ஜகத்குரு காதி அனந்தாசார்ய ஸ்வாமியால் ஸ்தாபிக்கப் பட்டது. இதுதவிர பல வித்வான்கள் தம்தம் திருஹரங்களில் குருகுல முறையில் கல்வி பயில்வித்து வந்தனர். மேலே சொன்ன மூன்று பாடசாலைகளிலுமே பயின்றவர் நமது அண்ணா ஸ்வாமி.

**திருத்தகப்பனாரிடம் பயிற்சி:** சிறு பிராயத்தில் தகப்பனாரிடம் கற்ற பாலபாடங்கள் இருக்க, வானமாமலை மடத்துப் பாடசாலையிலும் பின்னர் ஏற்படுத்தப்பட்ட வைஜயந்தீ பாடசாலையிலும் தகப்பனார் உபாத்யாயராயிருந்தபடியால் காவ்ய நாடகங்களை அவரிடம் பயின்றார். தகப்பனார் நோய் வாய்ப்பட்டு இரண்டாண்டுகள் திருமாளிகையிலேயே (தமது வீட்டிலேயே) இருக்க வேண்டியிருந்தபோது பல மாணவர்களையும் அங்கேயே வரவழைத்துப் பாடங்கள் சொல்லிவந்தார். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு

என்பது போன்ற கிரமத்தில் பாடம் நடந்தபோதிலும், எல்லா வகுப்புப் பாடங்களையும் இந்த இரண்டாண்டுகளில் நமது அண்ணா கற்றது அதிசயக்கத்தக்கது. சிசுபாலவத காவ்யம், நைஷதம், முராரியின் அநர்க்கராகவம் முதலான கிரந்தங்களைப் படிப்படியாகக் கற்காமல் ஒரே சமயத்தில் கற்றது தகப்பனாரின் போதனாசக்தியும், பிள்ளையின் கிரஹண தாரணசக்தியும் அத்புதமானவை என்றே காட்டுகின்றன.

கல்வியில் 'படுசுட்டி' என்றிருந்தபிள்ளை விஷமத்திலும் அப்படி இருந்ததில் வியப்பில்லை. பால்ய சேஷ்டைகளுக்கு அளவே இல்லை. தகப்பனாரிடம் பெற்ற தண்டனைகளும் பல. ஒன்றிரண்டை அக்காலத்து வாழ்க்கை முறையை விளக்கும் உதாரணங்களாக இங்கு விவரிக்கிறேன். ஒரு நாளிரவு அல்பசங்கைக்குப்போய், (சிறு நீர் கழித்தல்) பின் அநுஷ்டிக்க வேண்டிய வாய்கொப்பளித்தல், ஆசமனம் செய்தல் முதலியனவற்றைச் செய்யாமலே படுத்து விட்டதைக் கவனித்த தகப்பனார், "வாய்கொப்பளித்தாயா?" என்று வினவினார். பிள்ளையும், "ஆயிற்று" என்று சொல்ல பக்கத்தில் படுத்திருந்தவர் ஒருவரை எழுப்பி வாய் கொப்பளித்த அடையாளமுண்டா என்று பார்த்துவரச் சொல்ல, அவரும் எங்கும் நீர்வார்த்த அடையாளம் காணாது' அப்படியே தகப்பனாரிடம் சொல்லிவிட்டார். இதற்குத் தண்டனையாக மூன்று நாள் புழக்கடைத்தாழ் வாரத்தில் வைத்துப் பிள்ளையை உணவு உண்ணச்செய்து, பிறகு பெரியோர் ஸ்ரீபாததீர்த்தம் அருந்தித் தூய்மை பெறுவித்து உள்ளே புகவிட்டார். தகப்பனார் மற்றொரு சமயம், கோவிலில் என்ன சமயம் பார்த்துவா என்று பிள்ளையை அனுப்ப, இவரும் அங்கிருந்த பரிசாரகர் ஒருவரிடம் கேட்க, "ஆராதனமாகிறது" என்று அவர் சொல்ல, அதை அப்படியே தகப்பனாரிடம் திரும்பச் சொல்லிவிட திருவாராதனம் என்னாமல் ஆராதனம் என்று ஸாமான்யமாகச் சொன்னதற்காக பலத்த தண்டனை (கொம்பால் அடிக்கப்) பெற்றார்.

காவ்ய நாடகங்களை நன்றாகக் கற்றதுடன் திவ்யப் பிரபந்தங்களில் 3000 பாசுரங்கள் (மூலம்) தகப்பனாரிடம் கற்றார். பிள்ளையின் பதிமூன்றாம் வயதில் திருவிலச்சினை (பஞ்சஸம்ஸ்காரம்) ஸாதித்து ஸ்ரீவைஷ்ணவ ஜன்மாவை உண்டாக்கித் தந்து திருவாய்மொழியை (தாம் அசக்தரா யிருந்ததால்) வேறொரு ஸ்வாமி மூலம் ஓதுவித்தார். இவருக்கு பதினான்கு வயது பூர்த்தியான போது தகப்பனார் (நாற்பத்தி மூன்றாம் வயதிலேயே) திருநாடலங்கரித்து விட்டார். இது நமது ஸ்வாமிக்கு மாபெரும் இழப்பு என்று சொல்லத் தேவையில்லை. புதல்வரின் பெருமை களைப் பூரணமாக அநுபவிக்க பாக்யமில்லாதவராய் விட்டார் தந்தை. தாயார் 1944 வரை ஜீவித்திருந்த படியால் ஸ்வாமியின் அஸாதாரணமான ஸாதனைகளை நேரில் கண்டு மகிழப்ராப்தமாயிற்று. தமது தகப்பனார் தவிர ஸ்வாமியின் இளமைக்கல்வி மத்வஸம்ப்ரதாயஸ்த பிரஸித்த வித்வான்களான ஸ்ரீ ராமசந்த்ராசார், அவர் தம்பி ஸ்ரீ வித்யாதீசாசார் இருவரிடமும் ஸ்ரீமத் இளங் காட்டு வித்வான் ரங்காசார்ய ஸ்வாமியிடமும் நடந்தது.

**இளமையில் பெற்ற பரிசுகள்:** தமது 12ம் ஆண்டுக்குள் ளேயே ஸம்ஸ்க்ருதத்தில் ச்லோகங்கள், கத்யவ்யாஸங்கள் (வசனநடை) முதலியன எழுதுவதில் நல்ல தேர்ச்சி பெற்றி ருந்ததைக் கண்ட பிராம்மணப்பட்டு ரங்காசார்ய ஸ்வாமி என்பவர், இவற்றைப் பல உத்தம வித்வான்களிடம் காட்டி அவர்கள் உகப்பைப் பெறச் செய்தார். ஒரு சமயம் தாயார் தகப்பனாருடன் திருப்பதி சென்ற போது திருப்பதி யிலுள்ள வித்வான்களை ஒரு ஸதஸ்ஸாகக் கூட்டி, அத்திரளில் சிறு பிராயத்தினராக இருந்த அண்ணாவை அறிமுகப்படுத்தி, அவரே இவருடைய க்ருதிகள் சிலவற்றை வாசிக்கச் செய்து, வித்வான்களை மகிழச் செய்தார். அப்போது அங்கு வித்வத் ஸார்வபௌமராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி விசேஷ மங்களா சாஸனம் பண்ணி ஸன்மானமும் பண்ணினார்.

பின்னர் ஒரு முறை மைசூரில் ப்ரஸித்த வித்வானை ஸ்ரீமான் கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமி காஞ்சிக்கு எழுந்தருளின போது நமது அண்ணாவை பரீக்ஷிக்க நேர்ந்தது. இவரை விட மிகவும் மூத்த பிள்ளைகளிடம் எதிர்பார்க்கக் கூடியதைவிட அதிகமான வித்யை இவரிடம் குடி புகுந்திருந்தது கண்டு அதிசயித்து இரண்டு பவுன் கொண்ட டாலரை இவருக்குப் பரிசாக பரம ப்ரீதியுடன் வழங்க, அதைக் கொண்டு பெற்றோர்கள் பிள்ளையின் கைகளுக்கு கர பூஷணம் (காப்பு) செய்து அணிவித்தனர். அதை நமது 25-ம் வயது வரை அணிந்திருந்ததால் **தங்கக்காப்பு அண்ணா** என்று இவர் அழைக்கப்படலானார்.

சில ஆண்டுகளுக்குப்பின்னர் (தகப்பனார் காலத்திற்குப் பிறகு) காஞ்சி **வித்யோல்லாஸிநி ஸபை** அத்யக்ஷர் வித்யார்த்திகளுக்கு ஒருபோட்டி நடத்தினார். பகவத்ஸ்துதியாக பல ச்லோகங்களும், லௌகிக விஷயமாகவும், சாஸ்த்ரீய ஸரணியிலுமாக இரண்டு கட்டுரைகளும் (வடமொழியில்) எழுதிரவேணும் என்று நிபந்தனை. ''பாலகோபதேசமாலிகா'', ''தர்மவாத:'' என்று இரண்டு கத்ய வியாஸங்கள், திருப்பள்ளியெழுச்சியின் மொழி பெயர்ப்பாய் 20 ஸம்ஸ்க்ருத ச்லோகங்களாக ''ஸ்ரீரங்கநாதப்ரபோதிக ப்ரபந்தப்ரதிக்ருதி'', இவற்றை நம்ஸ்வாமி அத்யக்ஷரிடம் ஸமர்ப்பித்தார். ஒரு பெரிய வித்வத்ஸதஸைக் கூட்டி இந்த லேகனங்களை அரங்கேற்றம் செய்து வைக்கையில் பம்பாயிலிருந்து ஸ்ரீ வேங்கடேச்வர ப்ரெஸ் என்ற பெரிய அச்சாலய அதிபர்கள் யாத்திரையடைவே அங்குயாத்ருச்சிகமாக வர, அவர்கள் உத்ஸாகத்துடன் இந்த க்ருதிகளைப் பெற்றுப் போய் அச்சிட்டு வெளியிட்டனர். இவை நாடு பூராவும் பரந்து விளங்கின.

**சாஸ்த்ரப்பயிற்சி:** புஷ்கரம் ஆத்ய அனந்தாசார்ய ஸ்வாமியின் ப்ரபௌத்ரும் காதிக்ருஷ்ணமாச்சார்ய ஸ்வாமியின் குமாரருமான ஸ்ரீமத் அநந்தாசார்யஸ்வாமி காஞ்சியில் நமதுஸ்வாமியின் தகப்பனாரிடம் சிலவாண்டுகள் கல்வி பயின்று, பின்னர் திருப்பதியில் புரிசை ஸ்வாமியின் திருவடி வாரத்திலும் நீண்டகாலம் சாஸ்த்ரப்பயிற்சி பெற்று ஸ்வரூபக்ரந்தங்களையும் அதிகரித்து, ப்ரபல வித்வானாய் **ஜகத்குரு** என்று புகழ்பெற்று விளங்கினார். சிஷ்யாநுக்ரஹார்த்தமாக வடநாட்டில் பலகால் யாத்திரை செய்தருளி, காசியில் வித்வான்களை வென்று விசிஷ்டாத்வைத விஜய ஸ்தம்பம் நாட்டி, பம்பாய் நகரில் பனஸ்வாடியில் திருவேங்கட முடையான் ஸன்னிதியை தமிழ்நாட்டுக் கோவிலாகவே அத்யத்புதமாக நிர்மாணித்து ப்ரதிஷ்டிப்பித்தவர் இந்த மஹாஸ்வாமி. தமது பத்தாவது வயதிற்கு முன்னமேயே இவருடைய திருவருளுக்கிலக்கானார் நமது அண்ணா. திருத்தகப்பனார் பரமபதித்த ஸமயம் காதிஸ்வாமி வடதேசத்தில் இருந்ததால், அவர் திரும்பி வந்ததும் அவருடைய ஸ்வீக்ருதபுத்ர ஸ்தானத்தில் அவருடன் கூடவே இருந்து மேலே அதிகரிக்க வேண்டிய வித்யைகளை அவர் ஸன்னிதியில் அதிகரித்தார். காதி ஸ்வாமி, சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஹைதராபாத்தில் ஸீதாராம்பாக் என்னும் பெரிய தோட்டத்தில் (இதில் தேவப்பெருமாள் ஸன்னிதி ஒன்றுண்டு, ஓராண்டுக்மேல் தங்கி இருக்க, அண்ணாவும் கூடவே இருந்து, ஸ்வாமியிடம் சாஸ்த்ரபாடங்கள் தவிர ஸ்வரூப க்ரந்தங்கள் ஸேவிக்கவும் தொடங்கி திருமந்த்ரார்த்தமும் அங்கு ப்ராப்தமாயிற்று. தெலுங்கு ஹிந்தி இரண்டு பாஷைகளிலும் பரிசயம் ஏற்பட்டதும், மண்டயம் அனந்தான்பிள்ளை ஆழ்வார் ஸ்வாமி போன்ற ப்ரபல வித்வான்களின் திருவருளுக்குப் பாத்ரமானதும், காதிஸ்வாமி நியமனத்தின் பேரில் முதல் முதலாக சித்திரையில் செய்ய திருவாதிரையன்று **எம்பெருமானார் வைபவத்தை** ஒரு மணி அவகாசத்திற்குமேல் தமிழிலும் பிறகு

ஹிந்தியிலும் உபன்யாஸமாக ஆற்றியதும் இங்கேதான். மேலே காதிஸ்வாமி கல்கத்தா எழுந்தருளவே அண்ணா ஸ்வாமி ஸ்வஸ்தானம் திரும்ப நேர்ந்தது. அப்போது நம் ஸ்வாமிக்கு 19 ஆண்டுகளே நிரம்பியிருந்தன.

**மாதாமஹ சஷ்டிஜீயர் ஸ்வாமி அளித்த ஸௌபாக்யங்கள்:** நமது ஸ்வாமி காஞ்சீபுரம் திரும்பியபோது மாதாமஹ ஜீயர் ஸ்வாமியும் யாத்திரையிலிருந்து அங்கு திரும்ப எழுந்தருளியிருந்தார். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஜீயர் தாத்தாவிடம் பலவித்யைகள் அதிகரிக்க வாய்த்தது. ஸ்ரீ வசனபூஷணாதி ஸகல ரஹஸ்யக்ரந்தங்களையும், நாலாயிர திவ்யப்ரபந்த வியாக்கினங்கள் எல்லாவற்றையும் ஜீயர் ஸ்வாமி திருவடிகளில் பணிந்து வரியடைவே காலக்ஷேபமாகக் கேட்டு உபயவேதாந்த வித்வான், உபயபாஷா ப்ரவீணர் என்ற இரண்டு பெருமைகளும் சதத்துக்கு சதம் இவர் விஷயத்தில் உண்மை என்னும்படி தேர்ச்சி பெற்றது இவருக்கு அஸாதாரணமான தொன்று. மதாமஹ ஜீயர் ஸ்வாமி மிகவும் பிரஸித்தரான பெரியவராகையால் அவரை ஸேவிக்க வந்த பல ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களிடமும் **ஜீயர் பேரன்** என்ற ஒரு புகழ் ஏற்பட்டது.

**நமது ஸ்வாமியின் முதல் ஸம்ஸ்க்ருத க்ரந்த வெளியீடு—** ஒரு ஸமயம் ஸ்ரீ மதுபயவே திருநீர்மலை கண்ணமாசாரியர் என்ற பெரியார் திவ்யப்ரபந்த வைபவம் பற்றி தேவப்பெருமாள் ஸந்நிதி மண்டபத்தில் உபன்யஸித்தபோது, அங்கிருந்த ஒரு தாதாசார்ய ஸ்வாமி, "தமிழ் மிலேச்ச பாஷையானதால் அதிலுள்ள பாட்டுகள் வேதஸாம்யம் பெற்றவை என்பது தவறு" என்று ஆக்ஷேபிக்க, உபன்யாஸகர் ப்ரபல ப்ரமாணங்களைக் காட்டி த்ராவிட வேதங்களே ஆழ்வார்களின் தமிழ்ப்பாக்கள் என்று ஸ்தாபித்து ஸதஸ்ஸிலுள்ளவர்களை மகிழ்வித்தார். இந்த விஷயத்தையே வைத்து **திவ்யப்ரபந்த வைபவ விவேக:** என்ற

நூலை விரிவாக எழுதி கிரந்தலிபியில் அச்சிட்டு வெளியிட்டார் நமது ஸ்வாமி. இந்த நூல் தென்னாடு முழுதும் பரவி ஸ்வாமிக்குப் பிரஸித்தியை விளைவித்தது.

**குடும்ப யோகக்ஷேமங்கள்:** நம் ஸ்வாமியின் முன்னோர்களுக்கு ஆற்காட்டு நவாபு வடஆற்காட்டு ஜில்லாவிலுள்ள **திருவடிராயபுரம்** என்ற கிராமத்தை ச்ரோத்ரியமாக அளித்திருந்தார். (ச்ரோத்ரியர்-வேதநாவர்; இவர் பெற்ற பரிசு-ச்ரோத்ரியம்) இந்த கிராமத்துக்கடுத்த **சித்தாத்தூர்** என்ற அக்ரஹாரத்தில் ஒரு வீடும் இருந்தது. இனம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் ச்ரோத்ரியம் அரசுக்குச் சேர்ந்து விட்டபடியால் வீடும் விற்கப்பட்டது.

தமது 20-ம் ஆண்டு நிறையுமுன்னமே ஸ்வாமிக்கு விவாஹம் ப்ராப்தமாயிற்று. குன்றபாக்கம் திருமலை அனந்தாண்பிள்ளை வெங்கடவரதாசாரிய ஸ்வாமியின் குமாரத்தியான ஸௌபாக்யவதி **கோமளம்மாளே** இவருக்கு வாய்த்த தர்மபத்நி. மேற்படி அனந்தாண்பிள்ளை ஸ்வாமியின் பௌத்ரர்களான ஸ்ரீ தி. அ. கிருஷ்ணமாசாரியரும் ஸ்ரீ தி. அ. கோபாலசாரியரும் திருப்பதியில் பிரஸித்த வித்வான்களாய் இன்றும் விளங்குகின்றனர். நமது அண்ணா ஸ்வாமிக்கு இரண்டு குமாரத்திகளே பிறந்தனர். மனமொத்த இவரது தாம்பத்ய வாழ்க்கை நெடுகிச் செல்லாதது ஒரு தௌர்ப்பாக்கியம். தமது நடு வயதிலேயே ஸஹதர்மிணியை இழக்க நேர்ந்தது மிகவும் சோசநீயம். குமாரத்திகள் தக்க வயதில் நல்ல வித்வத் குடும்பங்களில் வாழ்க்கைப்பட்டு புத்ர பௌத்ர ஸௌபாக்யங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள். தமக்கு முதலில் பிறந்த தௌஹித்ரனை இளைய குமாரத்தியின் குமாரன் சிரஞ்ஜீவி ரங்கநாதனை ஸ்வாமி ஸ்வீக்ருத புத்ரனாக ஏற்றார். ஜாமாதாக்களான ஸ்ரீ திருநாராயணபுரம் அக்காரக்கனி அனந்தாண்பிள்ளை ஸம்பத் குமாராசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர்



ஸ்வாமியும் தேவிகளும்

மணவாள திருமலாசாரியரும் ஸ்வாமியின் நற்பணிகளில் துணைபுரிந்து வருகிறார்கள். தௌஹித்ரன் சிரஞ்சீவி அனந்தாழ்வானும் பௌத்ரன் சி. ராஜஹம்ஸமும் தாத்தாவுக்கு அன்புடன் பணிவிடைகளைச் செய்துகொண்டு இதர காரியங்களிலும் துணையாய் கைங்கர்யத்திலும் ஊற்றமுள்ளவர்களாய் வாழ்ந்து வருகின்றனர். பொலிக! பொலிக!

**வேதாத்யயனமும் வித்யாலய ஸ்தாபனமும்.** உபயுக்த வேதபாகங்களைச் சிறுவயதில் அதிகரித்தவராயினும் யஜுர் வேதத்தைப் பூரணமாக அத்யயனம் செய்வதில் ஊக்கம் கொண்டு ஸ்ரீமத் திருமலை விஞ்சிமூர் மாம்பள்ளம் ஸுதர்சனாசாரிய ஸ்வாமி என்ற பிரஸித்த வேத வித்வானை பெருமாள் கோவிலில் நித்யவாஸமாக இருப்பதற்கான பொறுப்புகளை ஏற்று, **வேத வேதாந்த வைஜயந்தி** என்ற பாடசாலையை ஸ்தாபித்தார் நமது அண்ணா. வேதநாவர்களில் ஒப்புயர்வற்றவரும் ப்ரக்யாத வித்வானுமான உபாத்யாய ஸ்வாமியிடம் சிஷ்ய வ்ருத்தி பண்ணி, தம்முடன் பலரையும் ஸஹாத்யாயிகளாய்ச் சேர்த்துக் கொண்டு ஆறு ஆண்டுகளுக்குள் வேதமோதக் கற்றுத் தெளிந்தார். 1913ல் இந்த வைஜயந்தி பாடசாலை மாதாமஹஜீயர் ஸ்வாமி மடத்தில் துவங்கப்பட்டு, பின்னர் கிழக்கு மாடவீதியில் கட்டப்பட்ட மூன்று மாடிக் கட்டிடங்கள், இரண்டில் (ஒன்று பாடசாலை, மற்றது மாணவர் இல்லம்) குடி ஏற்றப் பட்டது. இவை நித்யமாக நடக்க சாச்வத நிதியும் ஏற்படுத்தப்பட்டு தர்மகர்த்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறு வயதிலல்லாமல் தாமதித்துக் கற்க ஆரம்பித்தும் **வேத பாரங்கதர்** என்று பெரியோர் போற்றும் அளவுக்கு அபாரமான யோக்யதையை நமது ஸ்வாமி பெற்றுள்ளார். வேத பாஷ்யங்களையும் ஆராய்ந்து கற்றுத் தெளிந்து **வேதாத்யயன ஸர்வஸ்வம்** முதலான வேதலக்ஷண நூல்களை இயற்றி வெளியிட்டபோது வாதவிவாதங்கள் பல எழுந்தன. பிரபல பண்டிதர்களும் ஒப்புக்கொண்டு மகிழும்படி ஸமாதானம்



குடும்ப ஸமேதராய் ஸ்வாமி

கூறி தமது லக்ஷண வழிதான் மிகவும் பொருத்தமானது என்று ஸ்தாபித்தார் நமது ஸ்வாமி. இது பற்றிய விவரங்கள் ஒரு பாரதமாகும். இது தவிர ஸ்வாமிக்கு எல்லா உபன்யாஸங்களிலும் வேதவாக்குகளின் பரிமளம் கனமாயிருக்க வாய்த்ததனால் உண்டான கீர்த்தி அபாரம். ஸ்வாமி திருமிடற்றிலிருந்து ஆவிர்ப்பவித்த இனிய வேதஸ்வரங்களைப் பருகியவர்கள் பெற்ற ஆனந்தம் அளவிடற்பாலது. அநுபவித்தவர்களே அதன் பெருமையை அறிவர்.

**முதல் தென்னாட்டு யாத்திரையும் வாதக்ரந்த வெளியீடும்:** நம் ஸ்வாமி தமது பதினாறாவது வயதில் முதல் முதலாக ஸ்ரீரங்கம் சென்று திருவத்யயன உத்ஸவம் ஸேவிக்க எழுந்தருளியிருக்கையில் ஸ்ரீமத் குவளக்குடி சிங்கமய்யங்கார் ஸ்வாமி என்ற பரமரஸிகரும் தனிகருமானவருடைய திருவருளுக்கிலக்காகி தென்தேச யாத்திரைக்கு உபகாரமாக ரூ. 100-00ஐயும், தமது புத்தகாலயத்துக்காக பல பல ஸ்ரீகோசங்களையும் பரிசாகப் பெற்றார். ஸ்ரீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, திருக்குறுங்குடி, வானமாமலை முதலான பல திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் பண்ணி, பல வித்வான்களுடைய உகப்புக்குப் பாத்திரமாகித் திருக்குடந்தை சென்று சேர்ந்தார். அங்கும் உபய ஸம்ப்ரதாயங்களையும் சேர்ந்த வித்வான்களின் ப்ரீதி பூர்வகமான ஸ்நேஹம் உண்டாயிற்று. அங்கு குருச்சி கோபாலாச்சாரியர் என்ற வயதான பெரியவர் இவரை அழைத்துத் தாம் எழுதி அச்சிட்டிருந்த சதஸம்வாதம் என்ற நூலை இவருக்குக் காண்பித்தார். அது தென்னாசார்ய தூஷணை நிரம்பியது. இதற்குத்தக்க மறுப்பெழுத வேண்டுமென்ற எண்ணத்துடன் காஞ்சீபுரம் திரும்பி நமது அண்ணா, **சதஸம்வாத கண்டனம்** என்ற நூலை எழுதத் துவங்கி முதல் 8 பக்கம் அச்சிடுவித்து திருக்குடந்தையில் சில வித்வான்களுக்கு அனுப்ப, அவர்கள் "இந்த முயற்சி வேண்டாம், சதஸம்

வாத நூல் பரவாமல் நாங்கள் பார்த்துக் கொள்வோம்'' என்று வேண்ட, அம்முயற்சியினின்றும் சாந்தரானார். இதுவே நமது ஸ்வாமியின் வாத நூல்களுக்கு, ஸத்ஸம்ப்ர தாயத்தின் பாஹ்ய (வைஷ்ணவரல்லாதார்) குத்ருஷ்டிகள் (ஸ்ரீ வைஷ்ணவ தத்துவங்களை மாறுபடுத்தி உரைப்பவர்) வெளியிடும் தவறான விரோதமான கருத்துக்களைக் கண்டிக் கும் வகையில் நமது ஸ்வாமி வெளியிட நேர்ந்த பல நூற் றுக்கணக்கானவைக்கு முன்னோடியாகும்.

நமது ஸ்வாமி இந்தியா பூராவும் பலமுறை யாத்திரை யாகச் சென்று பல புண்ணிய ஸ்தலங்களில் எம்பெருமானைத் திருவடி தொழுதும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும், இந்த வியாஜத்தில் பலர்களைத் திருத்திப் பணி கொண்டும் உள்ளார். பத்ரிகாச்ரமயாத்திரை மூன்று பர்யாயமும், ஹ்ருஷீகேசம் வரை 23 தடவையும் துவாரகாந மங்களா சாஸனம் 7 பர்யாயங்களுமாகப் பல முறைகள் யாத்திரை நடந்துள்ளது. எப்போதும் வைதிக லௌகிகர்கள் சேர்ந்த அடியார் குழாங்களுடன் கூடியே செல்வது. திவ்ய தேசங் களில் அவ்வோஸ்தலங்களின் அருளிச் செயல் ஸேவை சாற்றுமறை, உபன்யாஸங்கள் இப்படி விலக்ஷண அநுபவ மாயிருக்கும்.

**ஸபிர்க்கத்திப் பரீக்ஷை:** திருவல்லிக்கேணியில் ஸ்ரீ வேத வேதாந்த வர்த்தினி என்று 110 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு ஸபை நடந்து வருகிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன் இதுமகோன்னத நிலையில் இருந்தது. பலபல வித்யார்த்தி கள் இந்த ஸபையினுதவியால் அபிவிருத்தி யடைந்தனர். ஒவ்வொரு ஆண்டும் இச்சபையினர் உபயவேதாந்தங்களி லும் பரீக்ஷைகள் நடத்தி வித்யார்த்திகளின் தரத்துக்கேற்ப பரிசுகள் கொடுத்து வந்தனர். நமது ஸ்வாமி தமது 19-வது

பிராயத்தில், ''திவ்யப்பிரபந்தங்கள் மூலத்திலும் வியாக்கியானத்திலும் என்னை பரீக்ஷை செய்யுங்கள். எக்கேள்வியாயினும் விடை சொல்லத் தவறினால் கத்தியினால் என் நாக்கையறுத்திடுங்கள்'' என்று கூராகத் தீட்டிய ஒரு கத்தியை எதிரே வைத்துக் கொண்டு பரீக்ஷை கொடுத்தார். மிகவும் கஷ்டமான, நுட்பமான அறிவு கொண்டே விடை தரும்படியான பல கேள்விகளுக்கும் பரீக்ஷகர்கள் வியந்து கொண்டாடும் வகையில் விடை தந்து வெற்றியும் பரிசுகளும் பெற்றார். பிறகு ஸ்வாமி அந்த ஸபையில் பரீக்ஷை கொடுக்கவில்லை. பல முறைகள் பரீக்ஷகராய் இருந்த துண்டு. சுமார் 50 ஆண்டுகளாக இச்சபையின் வார்ஷிக மஹோத்ஸவத்திற்குத் தலைமை தாங்கி, மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கி, உபன்யாஸம் நடத்தி அநுக்ரஹித்து வருகிறார். இந்த ஆண்டு (1980) வர்த்தினியின், 111-வது வார்ஷிக உத்ஸவத்திலும் ஸ்வாமி தமது அசக்தியையும் பாராது கலந்து கொண்டது இச்சபையின் மேல் ஸ்வாமிக்குள்ள மட்டற்ற ப்ரீதியையும் பெருமதிப்பையும் காட்டும்.

**க்ரந்தமுத்ராபணங்களும், வியாக்கியானங்கள் எழுதுதலும்:** நமது ஸம்ப்ரதாய கிரந்தங்கள் பல அக்காலத்தில் அச்சேராமலே இருந்தன. சென்னையில் ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை என்ற ஸபை சுரலபாடி ஆழ்வாரையா என்பவரால் ஏற்படுத்தப்பட்டு, இதன் மூலம் பல கிரந்தங்கள் அச்சிடப்பட்டன. முக்கியமாக நாலாயிர வியாக்யானங்களை எல்லாம் இவர்களே முதன் முதலில் தமிழில் அச்சிட்டவர்கள். பல உயர்ந்த ஸம்ஸ்க்ருத கிரந்தங்களை நமது ஸ்வாமி அச்சிட்டு வெளியிட வேண்டுமென உத்ஸாகம் கொண்டு, **ஸம்ப்ரதாய சந்த்ரிகா, புருஷகாரமீமாம்ஸை, ரஹஸ்யத்ரய காரிகாவளீ, ரஹஸ்ய விவேகம்** இவைகளைத் தெலுங்கு எழுத்தில் அச்சிட்டு முடித்தார். **ரஹஸ்யத்ரயமீமாம்ஸாபாஷ்யம், ஸ்ரீவசனபூஷணமீமாம்ஸாபாஷ்**

**யம்** முதலான கிரந்தங்களை அச்சிட முற்பட்டு அதற்கான பொருளுதவிக்காகச் சென்னையில் சில மஹான்களின் உதவியை நாட வேண்டியிருந்தது. அப்போது சென்னையில் (மயிலை) ப்ரபல வழக்கறிஞராக இருந்த ஸ்ரீ S. கோபால ஸாமி அய்யங்கார் என்பவர் ஆங்கிலத்திலும் ஸம்ஸ்க்ருதத்திலும் வல்லவராக வாழ்ந்திருந்தார். பல வித்வான்களிடம் ஸம்ப்ரதாய விஷயங்கள் படித்தவர். ஒரு சமயம் இவர் காஞ்சீபுரம் எழுந்தருளிருயிந்தபோது நம் ஸ்வாமி தாமச்சிட்டிருந்த கிரந்தங்களைக் காண்பித்து, மேல் அச்சிட வேண்டியவைகளைப் பற்றிச் சொல்ல, அவரும் அவைகளை சென்னையில் தாமே அச்சிடுவதாக உடனே ஒப்புக் கொண்டு சென்னை ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபை மூலமாகவே விரைவில் அச்சிடவும் செய்தார். **ரஹஸ்யத்ரய மீமாம்ஸாபாஷ்யம்,** பால ஸரஸ்வதியின் **தாத்பர்ய தீபிகை, சரமச்லோகடிப்பணி** முதலான உயர்ந்த கிரந்தங்கள் அச்சிடப்பட்டன. அச்சமத்தில் மேலே சொன்ன ஸ்ரீமான் கோபாலஸாமி அய்யங்காரின் ப்ரார்த்தனைக்கிணங்க, ஸகல பூர்வாசாரிய ஸ்தோத்திரங்களுக்கும் நம் ஸ்வாமி வியாக்கியானமிட ஆரம்பித்து **ஸ்ரீஸ்தவம், வரதராஜ ஸ்தவம்** இவையிரண்டின் விரிவான உரைகள் மேற்சொன்ன சென்னை ஸபை மூலமாக வெளிவந்தன. பிறகு முறையே மற்ற ஸ்தோத்திர வியாக்கியானங்களும் வெளிவந்தன.

**திவ்யார்த்த தீபிகை:** நாலாயிர திவ்யப்பிரபந்தங்களுக்கு நம்பூருவாசாரியர்கள் அருளிச் செய்துள்ள மிகச் சுவையுள்ள வியாக்கியானங்களை யாவரும் அறிந்து பயன் படும்படி எளியதமிழில் எழுதிவெளியிடவேண்டுமென்ற அவாவினால் உந்தப்பட்டுத் தமது பத்தொன்பதாவது வயதில் **இராமாநுசநூற்றந்தாதி**க்கு உரை எழுதி வெளியிட்டார் நமது ஸ்வாமி. இவ்வுரையில் பதவுரையும், பாசுர விளக்கமும் முக்கியமான இடங்களில் பூருவர்களின்

ஸ்ரீஸூக்தி விளக்கமும் இடம் பெற்றன, இதைக்கண்ணுற்ற பலர் இதுபோலவே நாலாயிரம் முழுவதற்கும் உரை வெளி வரவேணும் என்று விரும்ப, அப்படியே எழுதி வெளியிட ஆரம்பித்து முதலாயிரம், திருமொழி, இயற்பா ஆன 3000-த்திற்கும் உரை 1930-ல் முடிவுற்றது. மாதசஞ்சிகை யாக இவைகளை வெளியிடும் பொறுப்பை சென்னை வியா பாரிகளான M R கோவிந்தசாமி நாயுடு ஸகோதரர் ஏற்று நடத்தினர். இதற்குப் பல ஆண்டுகள் கழித்து திருவாய் மொழி ஆயிரத்திற்கும் தீபிகையுரை எழுதிவெளியிடப் பட்டது. இவ்வுரைகள் யாவும் பலபதிப்புக்கள் ஏறி நாடெங்கும் பரவியுள்ளன. மஹாமஹோபாத்யாய உ. வே. சுவாமிநாதையர், ஸேதுஸம்ஸ்தான வித்வான்ரா, ராகவய்யங்கார் ஸ்வாமி முதலான மஹான்கள் இவ்வுரை களைப் பற்றித் தங்கள் பேரானந்தத்தை நாடறிய வெளி யிட்டுள்ளனர், ''இவ்வினிய தமிழ் விரிவுரையின் பெருந் தகுதியை நோக்கி இவரை (P B A ஸ்வாமியை) **திவ்யப்ர பந்தப் பேராசிரியர்** என்றே சிறப்பித்துக் கூறுவேனெனின், அது கற்றூர் பலர்க்கும் உடன்பாடேயாம்'' என்று நமது அபிநந்தன பத்திரிகையில் ரா. ரா. ஸ்வாமி எழுதியுள்ளார்.

**ரஹஸ்யரத்னமாலிகாவும் திவ்யப்ரபந்தங்களுக்கு இதர மொழி வியாக்கியானங்களும்:** அந்நாளில் பல ஸம்ஸ்க்ருத பத்திரிகைகள் நாடெங்கும் நடந்துவந்தன. அவைகளி லெல்லாம் நமது ஸ்வாமியினுடைய வியாஸங்கள் (அந்தந்த பத்திரிகாசிரியர்கள் வேண்டிப் பெற்றவை) வெளிவந்து கொண்டிருந்தன. இவைகளைக் கடாக்ஷித்த ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதி வானமாமலை சின்னகலியன் ஜீயர்ஸ்வாமி, ''இந்த எழுதும் திறனை ரஹஸ்யக்ரந்தங்களிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் உபயோகித்தால் வட நாட்டாருக்கும் மிகவும் பயன்படுமே'' என்று ஸாதித்து அவ்விஷயத்தில் நியமித்தார். இதன் பலனாக, முமுக்ஷுப்படி, தத்வத்ரயம்,

ஸ்ரீவசனபூஷணம் இம்மூன்று ரஹஸ்யங்களையும் ஸம்ஸ்க்ருத ச்லோக ரூபமாக மொழிபெயர்த்து அதை ஜீயர் ஸ்வாமிக்கு முழுதுமாக வாசித்து உகப்பித்து ரஹஸ்யரத்னமாலிகா என்று பெயரிட்டு அச்சிட்டு வெளியிட்டார்.

இதே மாதிரி தெலுங்கு பாஷையிலும் திவ்யப்ரபந்தங்களுக்கு வியாக்கியானம் நம் ஸ்வாமி மூலம் வெளிவந்துள்ளது. ஹிந்தியிலும் அப்படியே.

**ஸர்வஸ்வநூல்கள்:** நமது ஸ்வாமி வெளியிட்டுள்ள ஆராய்ச்சி நூல்கள் பல. **வேதாத்யயன ஸர்வஸ்வம்** என்ற வேத விமர்சந க்ரந்தத்தைப்பற்றி முன்னமே தெரிவித்தாயிற்று. இப்படியே வேதாந்ததத்துவங்களை விளக்கும் **வேதாந்த ஸர்வஸ்வம்,** தர்க்க சாஸ்த்ர நூலான **தர்க்க சாஸ்த்ர ஸர்வஸ்வம்,** முதலான க்ரந்தங்களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்த வரிசையில் **த்ரமிடோபநிஷத்ப்ரபாவ ஸர்வஸ்வம்** என்ற க்ரந்தம் தலையானது. அருளிச்செயல்களை ஓதி, ''தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'' என்று வேதாந்த தேசிகரும், ''இது கொண்டு ஸூத்ரவாக்யங்களை ஒருங்கவிடுவர் (பாஷ்யகாரர்)'' என்று நாயனாரும் ஸாதித்துள்ளதன் உண்மையை ஸ்தாபிக்கும நூல். ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமும் பல இடங்களில் அருளிச்செயலில் ப்ரவேசமில்லாவிட்டால் தெளிவாகவும் இன்சுவைப்பெருக்காகவும் அமைந்திருக்காது, என்று பல ப்ரமாணங்களைக் காட்டி ஸ்தாபிக்கும் நூல். மிகவுயர்ந்த ஆராய்ச்சிகள் பல இந்நூலில் காணலாம்.

**காவியங்களும் நூல்களும்:** ஆசுகவி, மதுரகவி, சித்ர கவி விஸ்தாரகவி என்னப்படுகிற பல் வகைக் கவித்திறன்களில் நம் ஸ்வாமி இளமை முதலே நிகரற்றவர். வடமொழியில் இயற்றி வெளியிட்ட ச்லோகங்களும் தண்டகங்களும் பல்லாயிரம் தேறும். திவ்யப் ப்ரபந்தங்களில்

பெரும் பாகத்தை ஸம்ஸ்க்ருத ச்லோகங்களாக மொழி பெயர்த்துள்ளதை முன்னமே சொன்னோம். ரஹஸ்யரத்ன மாலிகையும் மிகவுயர்ந்த நூலே. **ஸ்ரீராமயண தண்டகம், ஸ்ரீராமபத்ரகர்ணாம்ருதம், கோவிந்தகீதாம்ருதம், கோபால பக்தாம்ருதம், ஸ்ரீவரவரமுநிதண்டகம், ஸ்ரீசைலேச பாதுகாஸஹஸ்ரம்** முதலான க்ரந்தங்கள் ஸங்கீத ஸாரஸ்யம் பொலிய இயற்றப்பட்டவை. இவை தவிர, **ஹயக்ரீவ சதகம், கருடவிம்சதி, கோபாலபஞ்சாத், கமலாஸ்தவம், லோகாசார்யஸ்துதி, ராமாநுஜஸஹஸ்ரநாமம், சடகோப ஸஹஸ்ரநாமம்** மணவாள மாமுனிகள் விஷயமாக 600 சுலோகங்கள் முதலான பல ஸ்தோத்ரக்ரந்தங்கள் பக்தர்களுக்கு ரஸாயனமாயமைந்தவை. இன்னும் ஸ்வாமியியற்றியுள்ள வாதக்ரந்தங்கள் பல ச்லோக ரூபமாயமைந்தவையுண்டு. இளமையில் பலபத்திரிகைகளுக்கு எழுதியனுப்பியுள்ள ச்லோகங்கள் எண்ணிறந்தவை.

**வாதவிவாதக்ரந்தங்கள்:** ஸ்வாமி ஒரு பல லேக்கழகம் என்று முன்னமேயே விண்ணப்பித்தேன். ஸ்வாமியின் கிரந்தங்கள் உண்மையில் எண்ணிறந்தவை என்பது எண்ணிக்கை, விஷயவின்யாஸம் **(infinite in number and coverage)** இரண்டிலுமேயாகும். பலபல வித்வான்கள் கூடி நூற்றாண்டுகளில் ஸாதிக்கக்கூடியதை நம் ஸ்வாமி தனியாகவே தம் வாழ்நாளில் ஸாதித்துள்ளார். விசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தை நம்மண்ணவிராமாநுசனும் அவர்வழிவந்த மஹாசார்யர்களும் வளர்த்த வகையைத் தெளிவாகப் பல படிகளாலும் உபன்யாஸங்களாலும் கிரந்தங்களாலும் போஷித்துள்ளார். நம் ஸ்வாமி **ஒரு அவதார புருஷர்** என்பது முக்காலும் உண்மையாகும். இதர ஸம்ப்ரதாய வித்வான்களும், மாச்சரியத்தினால் உந்தப்பட்டு பல படியாலும் ஸ்வாமியின் பெருமைகளை ஸஹியாமல் தூஷணை செய்தவருண்டு. தென்னாசார்ய தூஷணம் பண்ணுவதே

போது போக்காகக் கொண்ட வித்வான்களுமிருந்தனர். தம்ஸ்வாமியியற்றிய பல வாதவிவாதக்ரந்தங்கள் முக்கியமாகப் பின் சொன்னவர்களை நோக்கி வெளிவந்தவையே. தமது மதத்தில் திடமான விச்வாஸமும் ஊற்றமும் உடையவர் நம்ஸ்வாமி. வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி, அவையவை தோறணங்கும் பலபலவாக்கி நின் மூர்த்தி பரப்பிவைத்தாய் என்கிற திருவிருத்தப் பாசுரத்தைக் கொண்டு ஸமரஸபுத்தியை யூட்டுவது இவரின் இயல்பு. நற்குலத்து மாதர் கொண்ட கணவனையன்றி வேறொருவரை நெஞ்சாலும் நினையார்களன்றோ? தம் தம் மதங்களில் பற்றுடைமை அவச்யம்; அதேரீதியில் இதரமதப்பற்றுடையவரிம் விரோதம் கூடவே கூடாது என்பதே இவரின் இயல்பு. பூருவாசாரியர்களிடம் த்வேஷம் கொண்டு அவர்களின் கிரந்தங்களையும் அவர்களையும் தூஷிக்கும் நபர்கள் யாராயினும் அவர்களுடைய எழுத்தை நிரஸனம் பண்ணி வருகிறார் நம்ஸ்வாமி. இது நமது ஸம்பிரதாயத்தைக் காக்க ஒரு சிறந்தபணியே. ஸ்வாமியின் 75-ம் திருநக்ஷத்திர நினைவு மலரில் அடியேன் DEFENDER OF THE FAITH என்ற ஆங்கில விருதைச் ஸ்வாமிக்குச் சூட்டி ஒரு வியாஸம் வரைந்துள்ளேன். இந்த வழியில் ஸ்வாமியினுடைய கிரந்தங்களை ஆழ்ந்து படித்தவருக்கே ப்ரதிபக்ஷிகளுடைய மாசுற்ற எண்ணமும் அவர்கள் வஞ்சனையும், அவற்றை ஸ்வாமி எப்படி களைந்தெறிந்துள்ளார் என்பதும் விளங்கும். அதன்விரிவு ஒரு பாரதமாகும்.

வம்புச் சண்டைக்கு நம் ஸ்வாமி எப்போதும் வலுவில் சென்றதில்லை. இவ்விஷயத்தில் தம் கடமையையே செய்து செய்து வந்துள்ளார். இப்படி வெளியிடப்பட்டுள்ள வாதவிவாதக்ரந்தங்களில் பல உயர்ந்த விமர்சனங்கள்-நம் ஸ்வாமிக்கே அஸாதாரணமாயமைந்தவைகள் - காணப்படு

கின்றன. இதனால் ஸத்ஸம்ப்ரதாயத்திற்கு விளைவது உயர்வேயன்றி ஒரு இழுக்குமல்ல

''லோகாசார்ய - வரவரமுநி ஸம்ப்ரதாயம், தேசிக ஸம்ப்ரதாயம் என்று பெரும்பாலோரால் அழைக்கப்படும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் இரு பிரிவுகளுக்கும் அடிப்படையில் வேற்றுமையே இல்லை. இவை ஒரே கோட்பாட்டையே போற்றுகின்றன'',—என்பதுவே ஸ்வாமியின் திடமான கொள்கை. இதை ஸ்தாபிக்கவே பலபல கிரந்தங்கள் எழுதியுள்ளார் என்பதை ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவரும் மனதிற் கொள்ளவேணும். தமது மாச்சரியத்தால் வாதங்களைக் கிளப்பினவர் எவரும் ஸ்வாமி ஸாதித்துள்ள அசைக்க முடியாத விமர்சங்களுக்கு எதுவும் பதில் எழுத இயலவில்லை. தவிரவும், தமது திடமான கருத்துக்களுக்கு மாறாக எழுதுபவர் யாராயினும் கண்டிக்கத் தவறியதில்லை. இக்காரணத்தினால் தமது ஸம்ப்ரதாய வித்வான்களுடனும் வாத விவாதங்கள் நேர்ந்திருக்கிறது.

**மாதாந்தப் பத்திரிகைகள் :** தமது ஆசார்யரான காதி ஸ்வாமி துவக்கிய **மஞ்ஜுபாஷிணீ** என்ற ஸம்ஸ்க்ருத பத்திரிகையைத் தாமே ஸம்பாதகராக (editor) இருந்து பலவாண்டுகள் நடத்தி வந்துள்ளார் நம் ஸ்வாமி. கூட **வனமாலிகை, ப்ரஹ்ம வித்யா** என்ற பெயர்களில் தமிழ்ப் பத்திரிகைகளும் சிலவாண்டுகள் வெளிவந்தன. இவற்றுள் மஞ்ஜுபாஷிணீ வாரமொருமுறையும் வெளியிடப்பட்டது. காதி ஸ்வாமி காலத்துக்குப்பிறகு இவை நின்று விட்டன. 1932-ல் ஸ்ரீரங்கம் ஸ்ரீவிலாசம் பிரஸ்ஸிலிருந்து **அம்ருத லஹரீ** என்ற பத்திரிகை தொடங்கப்பட்டு சுமார் இருபது ஆண்டுகள் மாதப்பத்திரிகையாக வெளிவந்துள்ளது. 1948-ல் இப்போது நாம் நன்றாக அறிந்துள்ள **ஸ்ரீராமாநுஜன்** வெளிவர ஆரம்பித்து சுமார் 400 ஸஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. தமிழ் மக்கள் இப்பத்திரிகையை விலக்ஷண



தேவப் பெருமாள் கோஷ்டியில் ஸ்வாமி

விருந்தாக விரும்பிப் படித்து ஆனந்திப்பது யாவருமறிந்த விஷயம். ஸ்ரீ ராமாநுஜனுடன் **வைதிகமனோஹரா** என்ற ஸம்ஸ்க்ருத மாத இதழும், **ஸ்ரீராமாநுஜபத்ரிகா** என்ற தெலுங்கு இதழும், **ஸ்ரீ வைஷ்ணவஸுதா** என்ற ஹிந்தி பத்திரிகையும் தொடங்கப்பெற்றன. ஹிந்தி இதழ் சில வாண்டுகளுக்குள் நிறுத்தப்பட்டது.

**க்ரந்தமாலா :** நமது ஸ்வாமியின் காஞ்சீபுர முகவரி, க்ரந்தமாலா ஆபீஸ் சின்ன காஞ்சீபுரம் என்றே பல பல ஆண்டுகளாக பத்திரிகைகளில் காணப்படுகிறது. ஒவ்வொரு ஆசாரியருடைய க்ரந்தங்களையும் ஒரே புத்தகமாக அச்சிட்டு வெளியிடும் பெரும்பணியில் நம் ஸ்வாமி ஈடுபட்டு, **ஸ்ரீபகவத் ராமாநுஜக்ரந்தமாலா, வேதாந்த தேசிக க்ரந்த மாலா, வரவரமுநீந்த்ர க்ரந்தமாலா பூர்வாசார்ய ஸ்தோத்ர மாலா** முதலான பல புஸ்தகங்களை வெளியிட்டுள்ளார். நம்பிள்ளை செப்பு நெறியான ஈடு முப்பத்தாறுயிரத்தையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். மணவாள மாமுனிகளின் 600-வது ஆண்டு நிறைவின் ஸ்மாரகமாகப் பல பூர்வா சார்ய க்ரந்த முத்ராபணம் செய்துள்ளார். எங்களாழ்வான் வியாக்கியானத்துடன் வெளியிட்ட ஸ்ரீவிஷ்ணு புராணம் இவற்றுள் முக்கியமானது. தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் வெளியிடு முன்னமே தேசிக க்ரந்தங்களில் பெரும் பாலானவைகளை நன்கு பரிஷ்கரித்து அச்சிட்ட பெருமை நம் ஸ்வாமியையே சேரும்.

**கைங்கர்யத்தில் ஊற்றம் :** சிறுவயது முதல் அர்ச்சா ஸ்தல கைங்கர்யங்களில் மிகவும் ஊற்றமுடையவர் நம் ஸ்வாமி. வேதாத்யயனம் செய்ய ஆரம்பித்ததிலிருந்து, உபாத்யாய ஸ்வாமி வித்யார்த்திகளுடன் காஞ்சிபுரியி லுள்ள பல திவ்யஸ்தலங்களில் நடக்கும் எம்பெருமான் புறப்பாடுகளில் வேதபாராயண கைங்கர்யத்தை நிர் வஹித்து அந்தத் தொண்டில் அநுபவமும் ஊக்கமும் உண்

டாகும்படி செய்து வைத்தார். இப்பெரிய தொண்டு பல பல ஆண்டுகளாக நடந்து வந்துள்ளது. தேவப்பெருமாளின் இயல் கோஷ்டியைக் கட்டிக்காப்பவர் நம் ஸ்வாமி- இப்போது (1981) மிகவும் தள்ளாமையான தேஹஸ்திதியாயுள்ளதாயினும் சரீரத்தில் சிறிதளவு பலம் இருந்தாலும் பெருமாள் புறப்பாட்டை இழக்க மாட்டாதவர் நம் ஸ்வாமி.

வேதபாராயணமும் ஸ்தோத்ரபாட படனமும் தினமுமே நடத்த வேண்டுமென்று உபாத்யாய ஸ்வாமியின் ஸங்கல்பத்திற்கேற்ப 1919 நவம்பர் மாதம் முதல் நித்ய வேதபாராயண பிரதக்ஷிண கோஷ்டி தொடங்கப் பெற்றது. பின்மாலை (4-5 மணி) வேளைகளில் பெருமாள் புறப்பாட்டில் போலவே க்ரமப்பாராயணத்துடன் வீதிவலம் வருதல் நியதமாகக் கொள்ளப்பட்டது. வேதமோதக் கூடாது என்ற கட்டுப்பாடுள்ள அனத்யயன தினங்களில் ஆசாரியர்களியற்றியுள்ள ஸ்தோத்ரங்களை அநுஸந்தானம் பண்ணுவது என்ற க்ரமம் நெடுகிய காலமாக நடந்து வந்துள்ளது (50 ஆண்டுகளாக). தற்சமயம் (1981) இதுவும் நடைபெறுவதில்லை.

ஆழ்வாராசார்யர்களின் வார்ஷிக உத்ஸவங்களிலும் ப்ரஹ்மோத்ஸவங்களிலும் கோஷ்டியாக வெளியூர் சென்று இக் கைங்கர்யங்களைச் செய்து வந்துள்ளார் நம் ஸ்வாமி.

**நம்பிள்ளை ஸன்னிதி ப்ரதிஷ்டை—** ஸ்வாமியின் வாழ்க்கையில் அத்புதம்! ஆச்சர்யம்! என்று கொண்டாடக் கூடிய நிகழ்ச்சி நம்பிள்ளை ஸன்னிதி ப்ரதிஷ்டாபனம். கேவலம் தேவப்பெருமாளின் அருள் வெள்ளத்தினால் நடந்தேறிய காரியமிது. தேவப்பெருமாள் ஸன்னிதி வீதியில் கோவிலுக்கு மிகவருகில் மிகப்பெரிதாக நம்பிள்ளை ஸன்னிதி அமைந்துள்ளது. இதில் **நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்**

**பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை** என்ற மூன்று மஹாசாரியர்களும் ஸேவை ஸாதிக்கின்றனர். கூட ஸ்ரீரங்கநாதன், சக்ரவர்த்தி திருமகன், கண்ணன் மூன்று எம்பெருமான்களும் ஸேவை தருகின்றனர். நித்ய திருவாராதனம், மாஸ திருநக்ஷத்ரங்கள், வருஷ உத்ஸவங்கள் எல்லாம் செவ்வையாக நடப்பதற்கு, **சென்னபுரி ஆஸ்திக ஸ்ரீவைஷ்ணவஸமிதி** என்ற சாஸ்வத நிதி ஸ்தாபனமும் தக்க மஹநீயர்கள் பலரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேதபாராயணம், அருளிச்செயல் கோஷ்டி, புராணபடனம், ரஹஸ்யக்ரந்த (மூல) பாராயணம் இவை யாவையும் இங்கே முறையோடு நடந்து வருவது குறிக்கத் தக்கது. இது தவிர ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் பலவற்றை காலக்ஷேப முறையில் (கிரந்தத்தை வைத்துக்கொண்டு வரியடைவே கற்பித்தல்) இங்கு ஸ்வாமி காஞ்சி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கற்பித்துள்ளார்.

**சென்னையில் உபன்யாஸங்கள் :** தீபிகையுரைகள் வெளிவரத் தொடங்கியது முதல் சென்னைவாஸிகள் ஸ்வாமியை சென்னையிலேயே குடிபுகுந்து உபன்யாஸங்கள் மூலமாகத் தங்களை வாழ்விக்க வேணும் என்று 1925 ஆம் முதற்கொண்டே நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். சென்னைவாஸத்தில் ருசியில்லாமையாலும் தேவப்பெருமாள் கைங்கர்யத்தில் ஊன்றியவராயிருந்தமையாலும் இந்த யோசனைக்கு இணங்காமலே இருந்த நம் ஸ்வாமி 1931-ம் ஆண்டில் சென்னையில் உபன்யாஸங்கள் நிகழ்த்த இசையும்படி தேவப்பெருமாள் திருவருள் அமைந்தது.

தங்கசாலை வீதியிலுள்ள தொண்டை மண்டலம் உயர்நிலைப்பள்ளியில் ஒரு பெரிய கூடம் (hall) ஆயிரம் ஜனங்கள் வீற்றிருக்கக்கூடிய விசாலமாய் அமைந்துள்ளது. அதைப் பயன்படுத்திக் கொண்டு **பகவத்கதா ப்ரசங்கசபா** என்று ஒரு ஸபை பல பெரிய மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு கதா

காலக்ஷேபங்கள், ஸங்கீதக் கச்சேரிகள், உபன்யாஸங்கள் முதலியவைகளை நடத்தி வந்தனர். இந்த ஸபையின் ஆதரவில் வாரந்தோறும் சனிக்கிழமை மாலை (6-8 மணி), ஞாயிறன்று காலை (8-10 மணி) என்று இரண்டு உபன்யாஸங்கள் ஏற்பாடாகி 1931 ஜூலை முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த வேளை மிகவும் நல்லதாய் அமைந்ததால் 30 ஆண்டுகளுக்கு மேலாக 3000 உபன்யாஸங்களுக்கு மேலாக நடைபெற்றுள்ளன. முதலில் சில தனி உபன்யாஸங்களான பின்னர், ஆகஸ்ட் மாதம் ஸ்ரீராமாயணம் தொடங்கப்பட்டது. பண்டிதர், பாமரர், உத்யோகஸ்தர், வியாபாரி, இப்படிப்பட்ட பலதர மக்களையும் கவர்வதாயிருந்தன இவ்வுபன்யாஸங்கள். ஸ்ரீ உ. வே. (Sir) S. வரதாசார்ய ஸ்வாமி, திவான் பஹதூர் T. ரங்காசார்ய ஸ்வாமி, மஹாமஹோபாத்யாய உ. வே. ஸ்வாமிநாதய்யார், மஹர்ஷி வாஸுதேவசாரியர் ஸ்வாமி மாடபூஷி ஸுதர்சனமய்யங்கார் ஸ்வாமி பிரம்மஸ்ரீ T. S. நடேச சாஸ்த்ரியார் முதலான பல பிரமுகர்கள் ஸபையை அலங்கரித்து உபன்யாஸங்களைக் கேட்டு மகிழ்ந்தனர். முன்னர் ப்ரஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ S. கோபாலஸாமி அய்யங்கார் ஸ்வாமி விடாமல் அந்வயித்து வந்தார். ஸ்ரீராமாயணம் முதலில் 256 உபன்யாஸங்களில் முடிந்து பட்டாபிஷேகம் நடந்தது. பிறகு மறுபடியும் ஒரு தடவை நடத்தி இனிதே முடிக்கப்பட்டது. ஸ்ரீ பாகவதம், ஆளவந்தாருடைய ஸ்தோத்ரரத்னம், சதுச்லோகி, அஷ்டச்லோகி, அமலனாதிபிரான், திருமந்த்ரார்த்தம், ஆசார்ய ஹ்ருதயம், பகவத்கீதை இவைகளும் விரிவாக உபன்யஸிக்கப்பட்டு முடிக்கப் பெற்றன. பகவத் விஷயமும் ஸ்ரீவசனபூஷணமும் முடிவுறுமலே நின்று விட்டன.

1936-ம் ஆண்டு ஆரம்பித்து திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு, இவையான பிறகு திருவாய்மொழி தொடங்கி இடையறுது நடந்து வருகையில் திருவேங்கட

முடையான் இவ்வுபன்யாஸங்களைத் திருச்செவி சாத்த திருவுள்ளங்கொண்டு பக்தர்கள் உள்ளம்புகுந்து தன்விஷயமான **உலகமுண்ட பெருவாயா** பதிகத்தின் (6-10) இறுதிப் பாசுரங்களை தன் ஸன்னிதானத்திலேயே நடத்தும்படி பண்ணினான். தேவஸ்தான அதிகாரிகள் மிகவும் உகப்புடன் ஜீயர்ஸ்வாமிகளின் திருமுன்பே திருமலை ஸன்னிதி மஹா மண்டபத்தில் 10, 11 பாசுர வியாக்யானங்களை நடத்தி வைத்தார்கள். பிறகு ஆராமம் சூழ்ந்த அரங்கத்தின் நாயகனான பெரியபெருமாள் திருவேங்கடவனுக்குத் தான் தோற்றவனல்ல என்று காட்டும் வகையில், தன்விஷயமான திருவாய்மொழி (கங்குலும் பகலும்) பாட்டுகளைத் தன் கோவிலிலே உபன்யஸிக்குமாறு செய்து பெரிய திருவடி மண்டபத்தில் ஜீயர் ஸ்வாமி, ஸ்தலாசார்ய புருஷர்கள், இவர்கள் திருமுன்பே விலக்ஷணமாக நடத்திவைத்தான். இவற்றிற்குச் சிகரம் வைத்தாற்போல 7-ம் பத்து சாற்றுமறை திருவாறன்விளை என்ற மலைநாட்டு திவ்விய தேசத்தில் நடைபெற்றது பெரிய அதிசயம். ''இன்பம் பயக்க'' என்று தொடங்கும் இத்திருவாய் மொழிக்கு விஷயமான திருவாறன்விளை எம்பெருமான் ஸ்வாமியின் திருவாய்மொழி விளக்கத்தைச் செவியுற்று ஆனந்தப் பட்டது மஹத்தான அநுக்ரஹ காரியமன்றோ? ''கங்குலும் பகலும்'' ஸ்ரீரங்கத்தில் சாத்துமறை யானதும் கோஷ்டியார் திருமாலிருஞ்சோலை சென்றடைந்து ''நாறு நறும் பொழில்'' பாசுரத்தில் ஆண்டாள் பாரித்து, ஒருகால் எம் பெருமானார் நடத்திவைத்து **கோயில் அண்ணன்** என்று பெயர் பெற்ற சிறப்புகளை (நூறு தடாவில் வெண்ணெயும் நூறு தடாவில் அக்காரவடிசிலும்) கண்டருளப்பண்ணி மகிழ்ந்தனர். தாம் பெற்ற **அண்ணா** என்ற பெயரை அழகரருளால் அர்த்தமுள்ளதாகச் செய்துகொண்டார் நம் ஸ்வாமி. மாதம் நான்கு உபன்யாஸங்கள் வீதம் வேலூரில் (4 ஆண்டுகள்) ஸ்ரீராமாயணம் நடந்து ஒரு முறை பட்டாபிஷேகம் செய்யப்பட்டது. அந்த ஸமயத்தில் வட ஆற்காடு



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸன்னிதியில் திருப்பாவை உபந்யாஸம்

ஜில்லாவில் பலபல இடங்களிலும் உபன்யாஸங்கள் செய்து மக்களை வாழ்விக்க வாய்ப்பு ஏற்பட்டது.

மதுரையிலும் ஆழ்வார் திருநகரியிலும் சில மாதங்களாயினும் தங்கியிருந்து ப்ரவசனங்கள் பண்ண வேணும் என்று ஆப்தர்கள் பிரார்த்தித் கொண்டிருந்தனர். 1938-39-ல் கார்த்திகை, மாசி இந்த இரண்டு மாதங்களில் ஆழ்வார் திருநகரியில் ஆசார்ய ஹ்ருதயத்தை ஆழ்வார் திருமுன்னே 120 உபன்யாஸங்களில் பூர்த்தியாக அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. பல பிரபல வித்வான்கள் கோஷ்டியில் அந்வயித்து மகிழ்ந்தனர்.

**ஷஷ்டியப்தபூர்த்தி வைபவம்:** 1951-ம் ஆண்டு ஸ்வாமிக்கு ஷஷ்டியப்தபூர்த்தி மஹோத்ஸவம் ப்ராப்தமாயிற்று. தமது திருமாளிகையில் 17-3-51 முதல் ஆரம்பித்து 27-3-51 திருநக்ஷத்திரத்தன்று முடியும்படி பெரிய திருவிழாவாக நடந்தேறியது. சுமார் 200 ஸ்வாமிகள் உபயவேத பாராயணங்களில் அந்வயித்தனர். வித்வத் மஹநீயர்களின் உபன்யாஸங்களும், பெரிய ஸங்கீத வித்வான்களின் சச்சேரிகளும் நடைபெற்றன. ஹைகோர்ட்ஜட்ஜ் ஸ்ரீ W.S. கிருஷ்ணஸ்வாமி நாயுடுகாரு தலைமையில் ஒரு குழு இயங்கி இந்த மஹோத்ஸவத்தை எங்கும் காணாத அதிசயமாக நிறைவேற்றி வைத்தது விசேஷம். பிறகு சென்னையில் South India Chamber of Commerce Grounds-ல் விசேஷ பந்தல் அமைத்து, ஐந்து நாள் விசேஷ உத்ஸவமாக நடந்தது. சென்னை ஹைகோர்ட் தலைமை நீதிபதி ஸ்ரீ P.V. ராஜமன்னார் விழாவினைத் துவக்கி வைத்தார். வேதத் திருநாள், பிரபந்தத் திருநாள், ப்ரவர்த்தகத் திருநாள் (ஆசார்ய வைபவத் திருநாள்), அபிநந்தனத் திருநாள் என்று ஒவ்வொரு நாளும் கொண்டாடப் பட்டது. இதற்குப் பின்னர் இந்தியத் தலைநகரான புதுடில்லியில்



ஷஷ்டியப்த பூர்த்தி விழா

மத்திய மந்திரிகள், ஸுப்ரீம்கோர்ட் ஜட்ஜிகள் மற்றும் உயர்பதவியிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஸ்வாமியின் அபிமானிகள் எல்லாரும் கலந்து கொண்டு கோலாஹலமான 5-நாள் திருவிழாவாக நடத்தியது வாசாமகோசரம்.

**திருப்பாவை ப்ரவசனம்:** ''மாஸாநாம் மார்க்க சீர்ஷோஹம்'' என்ற கீதாசாரியன் திருவாக்குக்கு ஏற்ப மார்கழி மாதம் பரம ஸாத்விகமான மாதம் என்று கொண்டாடப்பட்டு விலக்ஷணமான தேவாலயபூஜாக்ரமமும் திருப்பாவைஅநுஸந்தானமும் ஏற்பட்டுள்ளது. பலவாண்டுகளாக இம்மாதத்தில் வித்வான்களால் திருப்பாவைப் பாசுரங்களின் விளக்கம் சொற்பொழிவாக நிகழ்த்தப்படுகிறது நமது ஸ்வாமி திருப்பாவைப் பாசுரங்களுக்குப் பல உரைகள் எழுதி வெளியிட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. பாசுரங்களை வெவ்வேறு த்ருஷ்டிகளால் கண்டு உள்ளுறை பொருளை (ஸ்வாபதேச மென்று) சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றைச் சுவைத்து அதன் இனிமையைப் பலரும் உணரும்படி வெளியிட்டுள்ளார். 1931ம் ஆண்டு முதல் சென்னையில் நம் ஸ்வாமியின் திருப்பாவை உபன்யாஸங்கள் நடந்து வந்துள்ளன. ஒரு ஆண்டும் நின்றதில்லை. சில ஆண்டுகளில் இரண்டு இடங்களில் நடந்ததும் உண்டு. அப்படி 1964 ம் வருஷம் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதியிலும் திருப்பாவை உபந்யாசம் நடைபெற்றது. ஸ்வாமியின் திருப்பாவை உபன்யாஸங்களை ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருப்பவர் பலருண்டு. எத்தனை தடவை கேட்டாலும் பர்யாப்தி பிறவாமல் "நவோ நவோ ஜாயதி—ஸ்ரேச்ரேயாந் பவதி ஜாயமாந:" என்ற கணக்கிலே நம்மால் நினைத்துப்பார்க்க முடியாததும் புதிது புதிதாகவும் ஆனால் பரமப்ராமாணிகமானதுமான—பொருள்களை எடுத்துச் சொல்லும்போது நம்பிள்ளை மணவாளமாமுனிகள் போன்ற மஹாசார்யர்கள் ஆவேசித்து உபன்யஸிக்-

இன்றனரோ என்று ப்ரமிக்க வைக்கும். பல ஆண்டு களாக திருப்பாவை மாதத்தில் நடுவில் ஒருநாள் ஸ்வாமி அரையராக ஸேவை ஸாதித்து பக்தர்களை மகிழ்வித்து வந்தார்.

**நம் ஸ்வாமி பெற்றுள்ள பிருதுகள்.**

1. **உபய வேதாந்தாசாரியர் :** இது எல்லா ஸ்ரீ வைஷ் ணவர்களும் பிறப்படியாகக் கொள்வதாயினும் நம் ஸ்வாமிக்கு அஸாதாரணமாக பொருந்தக்கூடியது. உபய வேதாந்தங்களிலும் இவரையொத்த ஆழ்ந்த அறிவு படைத்த மற்றொரு வ்யக்தியைக் காண்பது அரிதாகும்.

2. **ப்ரதிவாதி பயங்கரர் :** இது குடிப் பெயராக அமைந்த ஒன்றாயினும் இது இவருக்கு அஸாதாரணமாக அமைந்த உண்மையான பிருது. நம் ஸ்வாமி இருபது பிராயம் முதலாகவே ப்ரதிவாதிகளுக்கு பயங்கரராகவே இருந்து விஜயத்வஜம் நாட்டி வருவது உலகமறிந்த விஷயம்.

3. **மஹா வித்வான் :** ஸ்வாமி எழுதியுள்ள நூல்கள் எண்ணிறந்தவை. வைதிக மனோஹராவிலும் ஸ்ரீ ராமா நுஜனிலும் மாதா மாதம் வெளியாகும் கட்டுரைகள் ஸ்வாமியின் கரைகாண இயலாத கல்வியாற்றலுக்கு எடுத் துக்காட்டாக விளங்குகின்றன. இவரை **மஹா வித்வான்** என்று பல வித்வான்கள் அழைத்துவந்ததால் இந்த பட்டம் நிலைத்துவிட்டது.

4. **வேத பாரங்கதர் :** தமது 20-வது வயதுக்கும் மேலே வேதமோத முற்பட்டு, அதில் வெற்றி பெற்று, வேத பாஷ்யங்களையும் பரிசீலித்து, வேத லக்ஷண நூல்களை யும் எழுதி வெளியிட்டு பெருப் பெருத்த வித்வான்கள் புகழ்ந்து கொண்டாட நின்ற பெருமை உலகமறிந்தது. ஒரு

பஞ்சாதியாவது ஓதாத உபன்யாஸமே கேட்கக் கிடைக் காது. இந்த பிருது ரிஷிகேசம் சிவானந்த ஸரஸ்வதி, ஸ்வாமியைக் கொண்டாடி அளித்தது.

5. **வ்யாக்யாந வாசஸ்பதி :** நமது ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களுக்கும் ஆசார்யர்கள் பணித்துள்ள பலபல துதிகளுக்கும் ஸ்வாமி தேனும் பாலும் கன்னலும் அமுது மென்னலாம்படியான வியாக்யானங்கள் அருளிச் செய் துள்ளமை ப்ரஸித்தம். இது மிகப் பெரியபணி. பல பாஷைகளிலும் வியாக்யானமிட்டு அருளிச் செயல்களை நாடெங்கும் பரவச் செய்தவர் நம் ஸ்வாமி. இந்த பிருதும் சிவானந்தரால் அளிக்கப்பட்டதே.

6. **ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி :** ஜகதாசார்யர் என்பது நம்பிள்ளையை. நம்பிள்ளைக்கும் அவர் ப்ரிய சிஷ்யர் களான வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை இருவருக்குமாக விக்ரஹப்ரதிஷ்டையுடன் பெரிய கோவில் கட்டி அதை அழகாக நிர்வஹிப்பவர் நம் ஸ்வாமி. ஜகதா சார்ய ஸிம்ஹாஸனம்—நம்பிள்ளையின் ஸ்தானம். அதை நிர்வாஹம் பண்ணும் நம் ஸ்வாமிக்குத் தக்க பிருதே இது. இவரையே தனியே ஜகதாசார்யர் என்றல் தகும்.

7. **பத்ம விபூஷண :** இந்த உயர்ந்த பட்டம் டில்லி அரசாங்கத்தினுல் 1967-ல் நம் ஸ்வாமிக்குச் சூட்டப் பட்டது. இதனுடைய பெருமதிப்பு யாவருமறிந்ததே.

8. **மஹா மஹிமோபாத்யாய :** ப்ரயாகையிலுள்ள **பாரதீ பரிஷத்** என்ற வித்வத்ஸபை, ''தற்கால ஸப்தரிஷிகள் என்று நம்மால் உத்தேசிக்கப்பட்ட எழுவருக்கு இப்பட்டம் அளிப்பதாக இருந்து நான்கு பேர்களே உபஸ்திதர்களாய் இருப்பதால் இந்நால்வர்க்கு அளிக்கப்படுகிறது'' என்று அறிவிப்புடன் 5000-மக்கள் கூடியிருந்த ஸபையில் உப

ராஷ்ட்ரபதி ஸ்ரீ பாதக் அவர்கள் கையால் இப்பட்டம் 1971 ஆகஸ்ட் மாதம் அளிக்கப்பட்டது.

9. **செந்தமிழ்ச் செல்வர் :** தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் யாவற்றையும் கசடறக் கற்று, தமிழில் நல்ல விரகராய், விளங்கும் ஸம்ஸ்க்ருத வித்வான் நம் ஸ்வாமியைப் போல வேறு ஒருவர் காணக்கிடைக்க மாட்டார். திவ்விய ப்ரபந்த **திவ்யார்த்த தீபிகை** வெளியிடத் தொடங்கிய காலத்திலேயே மதுரை **செந்தமிழ்** பத்திரிகை ஆசிரியர் மஹா வித்வான் திருநாராயணய்யங்கார் ஸ்வாமி இந்த பிருதை நம் ஸ்வாமிக்கு வழங்கி உவந்தனர்.

**வைபவ நிகமனம் :** பெரிய மடாதிபதிகள் பல வித்வான்களைக் கொண்டு மிகவும் பரிச்ரமப்பட்டு ஸாதிக்கக் கூடிய காரியங்களை ஸ்வாமியொருவரே செய்து வருவதனால் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை ஸ்வாமி, ஸ்ரீ திருக்குறுங்குடி ஸ்வாமி, திரிதண்டி ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமி மைசூர் ராஜகுரு ஸ்ரீபரகாலஸ்வாமி, அஹோபில மடாதிபதி ஸ்ரீ அழகிய சிங்கர், காமகோடி பீடம் சங்கராசார்ய ஸ்வாமி முதலான பிரஸித்த மடாதிபதிகளும், மற்றும் பல பிரபல வித்வான்களும் லௌகிக ப்ரமுகர்களும் நம் ஸ்வாமியின் க்ரந்த, ப்ரவசன கார்ய விசேஷங்களை வியந்து பாராட்டி உலகத்து உலகமறிய வெளியிட்டுள்ள அபிநந்தன பத்திரிகைகள் அபரிமிதம். இவை யாவும் அச்சேறி நாடெங்கும் பரவியுள்ளன. இந்த வைபவச் சுருக்கத்தில் இவைகளில் எதையும் எடுத்துக் காட்ட இயலாதது வருத்தமாகவே உள்ளது.

1974-ம் ஆண்டில் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி கோவிலில் ஒரு கோர்வை (series) உபன்யாஸங்கள் ஸாதிப்பதற்காக சென்னையில் தங்கியிருந்தபோது எதிர் பாராமல் 21—2—1964 அன்று ஹ்ருதய கோசக் கோளாறு

(heart attack) ஏற்பட்டதனுல் ஸ்வாமி அர்ச்சிராதி மார்க் கத்தின் எல்லேக்குச் சென்று பகவத் ப்ரஸாதத்தினுல் மீண்டார் என்று சொல்லுமளவுக்கு ஒருநிலே ஏற்பட்டது. இதனுல் சரீரத்தில் அதிகமான தளர்ச்சி ஏற்பட்டு, ஸ்வாமி தம்முடைய பல காரியங்களேக் குறைத்துக் கொள்ளும்படி ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாளில் 24 மணியில் சுமார் 20 மணி அவகாசம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தவர் நம் ஸ்வாமி. பின் மாலேயில் எழுந்திருந்து நித்ய ப்ரதக்ஷிண கோஷ்டியில் அந்வயித்து விட்டு, வெள்ளக்குளமெழுந்தருளி காலே அநுஷ்டானங்களே எல்லாம் க்ரமேண முடித்துக் கொண்டு, தௌத வஸ்த்ரம் தரித்து பன்னிரு திருநாமமு மணிந்து இராமாநுச நூற்றந்தாதி அனுஸந்தானத்துடன் எழுந்தருளி 7 மணிக்கெல்லாம் நம்பிள்ளே ஸன்னிதியில் காலக்ஷேபம் ஸாதிக்க எழுந்தருள்வது தினப்படி வழக்கம். தினமும் 50 பக்கத்துக்கு மேல் எழுத்துப்பணி. எழுத ஆரம்பித்தால் ஒரு திருத்தமில்லாமல் எழுதி முடித்திடுவர். நடுவில் ஒரு புத்தகம் பார்க்க வேண்டிய அவசியம் இருந்த தில்லே. எழுதியதை மறுமுறை பார்க்க வேண்டிய அவசியமு மில்லாமல் உடனே அச்சாபிஸுக்கு அனுப்பியாய்விடும். வரும் புரூப் (proof) களேயும் வேகமாகவே கடாக்ஷித் தருளுவர் ஸ்வாமி. ஆயினும் எல்லா தவறுகளேயும் திருத்தி யாய்விடும். 1994-லிருந்து நித்யப்ரதக்ஷிண கோஷ்டி, சென்னேயுடன்யாஸங்கள் முதலான பல ஜோலிகளிலிருந்து விச்ராந்தி பெற வேண்டியதாயிற்று. சரீரத்தளர்ச்சியில் அதிக நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்த மும் ஏற்பட்டது. உபன்யாஸப் பணியும் எழுத்துப் பணியுமே எனக்கு 'டானிக்' என்று அடிக்கடி ஸாதித்தருள் வர் நம் ஸ்வாமி. இவையே ஜீவாதுக்களாக அமைந் துள்ளன. சமீபத்தில் சில ஆண்டுகளாக தளர்ச்சி மேன் மேலும் அதிகரித்து வருகிறது. இருந்தபோதிலும், இந்த (ரௌத்ரி) மார்கழி மாதம் பூராவும் சென்னேயில் தங்கி திருப்பாவை விசேஷார்த்த ப்ரவசனம் நடத்தியருளினூர்

நம் ஸ்வாமி. பல முறைகள் ஸ்வாமி திருவாயால் திருப்பாவை உபன்யாஸம் கேட்டவர்களும் இந்த ஆண்டு ஸாதித்த அபூர்வ விசேஷார்த்தங்களைப்போல் முன்பு ஸாதித்ததில்லை என்று வியந்து கொண்டாடினர்.

நம் ஸ்வாமிக்கு இந்தப் பங்குனியில் 81 திருநக்ஷத்திரங்கள் பூர்த்தியடைகின்றன. நிகழ்ச்சிகள் நிரம்பிய இவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூற முற்படுவது ஸாஹஸமான செயல். 1964-ல் (ஸ்ரீராமாநுஜன்-184) இவ்வாழ்க்கை வரலாற்றினை அடியேன் மிகச்சுருக்கமாக ஆங்கிலத்தில் வரைந்து வெளியிட ப்ராப்தமாயிற்று. 1956-ல் ஸ்வாமி தம் சரிதையை விரிவாக எழுதி வெளியிட்டார். 1970-ல் அதையே சுருக்கி மேல் விஷயங்கள் சிலவற்றைச் சேர்த்து வெளியிட்டுள்ளார். பெரும்பாலும் அவைகளைத் தழுவியே இவ்வரலாற்றினைப் புனைந்துள்ளேன். 30 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்வாமியின் பரிசயமும் 20 ஆண்டுகளாக நெருங்கிய பழக்கமும் உள்ளபடியால் அவருடைய அநுக்ரஹத்தைப் பூர்ணமாகப் பெற்றவன் அடியேன் என்று பெருமையுடன் விண்ணப்பித்துக்கொள்ளு கிறேன். ஸ்வாமியிடம் அடியேன் அநுபவித்துள்ள மஹா குணங்களைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே போகலாம். அவர் படைத்துள்ள பெருமைகளாலும், இயற்றியுள்ள ஸாதனைகளாலும் எவ்வளவு பரத்வம் கொண்டாடினாலும் தகுமாயினும், ஸௌலப்ய ஸௌசீல்ய நிதியாகவே பழகுவது மிகவும் விசேஷமான அம்சம்.

ஸ்வாமி எம்பெருமானார் போல இன்னும் நெடுகிய காலம் அரோக திடகாத்திரராக நம்மிடையே வாழ்ந் திருந்து நம்மெல்லாரையும் வாழ்விக்குமாறு அருள்புரிய வேண்டுமென்று ஸ்ரீ ருக்மிணீ ஸமேத ஸ்ரீ வேங்கடகிருஷ்ண பார்த்தஸாரதி ஸ்வாமி திருவடிகளில் இறைஞ்சி நிற்கிறேன்.

ஸ்ரீமதே ஸௌம்யஜாமாத்ருமுநி பாதாப்ஜஸேவிநே ।
அண்ணங்கராசார்யவர்யாய நித்யஸ்ரீர்நித்ய மங்களம் ॥